c) பணிசெயல் முறைமையின் தேவைகளை செய்தல்



புதிய செலுத்தி
(New drive)

பிரிவிடப்பட்ட செலுத்தி
(Partitioned drive)

03. தரவுகள் அனைத்தும் அழிந்துவிடும்.

04. வன்வட்டில் கோப்பு இடப்படும் போது ஒரே தடவையில் சேமிக்க முடியாத நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் கோப்பின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு இடங்களில் சேமிக்கப்படுதல் துண்டாக்கல் எனப்படும்.


05. துண்டாக்கல் மூலம் கோப்பினை வாசிக்கும் போது இதன் பாகங்கள் ஒரே வரிசையில் அமைந்திராமை காரணமாக அவற்றை வாசிக்க நீண்டநேரம் செல்வதனால் கணினியின் செயற்றிறன் குறைகிறது.

06.

Start → Control Panel → Folder Options → View → Hide Extensions for known File Types → சரி அடையாளத்தை (✓) நீக்குக. → OK
கட்டளைப் பொத்தானை அழுத்துக.

07.

கோப்பின் நீட்சி	கோப்பு வகை
exe	Executable
docx	Word
xlsx	Excel
pptx	PowerPoint
accdb	Access



www.ikedu.lk

அலகு: 06 - சொல் முறைவழிப்படுத்தல்
பகுதி–I

1. Microsoft word இல் புதிய வேலை பரப்பை ஆரம்பிப்பதற்கும் சேமிப்பதற்கான குறுக்கு வழிச் சாவிகள் முறையே.
   1) Ctrl +N, Ctrl+O 2) Ctrl + N,Ctrl + S 3) Ctrl + S , Ctrl + O 4) Ctrl + N , Ctrl+ P

2. தெரிந்தெடுத்த ஆவணத்தில் (text document) உள்ள சொற்களின் எண்ணிக்கையைப் பெறுவதற்கு Microsoft word ல் எக்கருவியை பயன்படுத்தலாம்?
   1) Spelling & Grammar 2) Speech 3) Auto correct option 4) Word count

3. MS word ல் Table ஒன்றை உட்புகுத்துவதற்கு பயன்படுத்தப்படும் menu யாது?
   1) Insert menu 2) View menu 3) Format 4) Review

4. அட்டவணை (Table) ஒன்றில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கலங்களை ஒன்றாக இணைப்பதற்குப் பயன்படுவது
   1) Split Cell 2) Delete 3) Select 4) Merge Cell

5. இயங்கிக் கொண்டிருக்கும் Word ஆவணங்களை உடனடியாக மூடுவதற்குப் பயன்படும் குறுக்குச் சாவி
   1) Alt+f4 2) Ctrl+f4 3) Shift+f4 4) Tab+f4

6. பின்வருவனவற்றுள் எக்கூற்று Ms Word ஆவணமொன்றினைத் திறக்கும் வழிமுறைகளில் சரியானது?
   1) File +Open 2) Press Ctrl+O 3) Click on the 📂 button 4) மேற்கூறிய யாவும்

7. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில், பின்வருவனவற்றுள் எவ் வசதியானது ஒரே விதமான நூறு கடிதங்களை உருவாக்குவதற்கு மிகப் பொருத்தமான வழியாகும்?
   1)Drop cap 2) Auto text 3) Auto format 4) Mail merge

8. பாடசாலைக்கல்வி நடைமுறையில் சொல்முறைப்படுத்தல் மென் பொருளின்(word processing software) பயன்பாடு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
   1) பாடசாலை அழைப்பிதழ்கள் தயாரித்தல்
   2) பெற்றோர் கூட்டத்திற்கான கடிதங்களை உருவாக்குதல்
   3) அதிபரின் உரையைப் பதிவு செய்தல்
   4) ஓர் ஆவணத்தினை தயாரித்து அதற்கான வரைபடங்களை வரைதல்

9.சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் Portrait மற்றும் Landscape ஆகியவை அழைக்கப்படுவது.
   1) Page Orientation 2) Paper Size 3) Page Layout 4) Margin

10. சொல் முறைவழிப்படுத்தலில் க் I கிளிக் செய்து செய்யப்படும் செய்முறைக்கு பதிலாக செய்யக்கூடிய சுருக்க முறை பின்வருவனவற்றில் யாது?
   1) Alt+Ctrl+I 2) Ctrl+I 3) Alt+I 4) Shift+I

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

11. ஆவணமொன்றை அச்சிடுவதற்கான குறுக்குச் சாவி?

1) Ctrl+O 2) Ctrl+S 3) Ctrl+P 4) Ctrl+f4

12. ஓர் ஆவணம் ஒன்றை அச்சுப்பதிவு செய்வதற்கு முன்னர் நீங்கள் எப்பொழுதும்

1) Print கட்டளையைப் பாவிக்க வேண்டும்
2) Print Preview கட்டளையைப் பாவிக்க வேண்டும்
3) Print கட்டளையையும் Print Preview கட்டளையையும் பாவிக்க வேண்டும்
4) உங்கள் ஆவணத்தினை மாற்றம் செய்ய வேண்டும்

13. Word இல் Type செய்த சொல், சொற்களுக்கு கீழே காணப்படும் சிவப்பு நிறக்கோடு குறிப்பது.

1) Grammar Mistake 2) அடிக்கோடு.
3) எழுத்துப் பிழை 4) சொற்களுக்கிடையிலான இடைவெளி அதிகம்

14. Document இற்கு Insert செய்ய முடியாதது.

1) Picture 2) Table 3) Symbol 4) Margins

15. Msword இல் Page Layout மூலம் எதனை மாற்றலாம்

1) Margins 2) Orientation 3) Page size 4) மேற்கூறிய யாவும

.

16. ஆவணமொன்றின் பக்கத்தின் நிறத்தை மாற்றுவதற்கு பயன்படுவது?

1) home 2) design 3) page layout 4) view

17. வித்தியாசமான எழுத்துக்களை வித்தியாசமான மொழியில் இருந்து பெற உதவுவது?

1) FONT SIZE 2) FONT 3) BOLD 4) ITALIC

18. MS word ல் Picture ஒன்றை உட்புகுத்துவதற்கு பயன்படுத்தப்படும் menu யாது?

1) Insert menu 2) View menu 3) Format 4) Table

19. 15th November இல் th என்பது என்ன format இல் உள்ளது

1) Font 2) Superscript 3) Subscript 4) Alignment

20. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள் ஒன்றின் கருவிகளை அருகிலுள்ள உரு காட்டுகின்றது.



கருவிகளின் பெயர்கள் முறையே.

1) தடிப்பு (Bold), சாய்வு (Italic), அடிக்கோடு (Underline)
2) WordArt, சாய்வு, தடிப்பு
3) எழுத்தின் அளவு (font Size), சாய்வு, அடிக்கோடு
4) சாய்வு, தடிப்பு, அடிக்கோடு

21. ஆவணங்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் சொற்களுக்கு பதிலாக அதன் கருத்துக்களை உடைய வேறு சொற்களை பயன்படுத்த தேவையான கருவி?

1) சொற்களை தேடுதலும் மாற்றிடுதலும் (Find & Replace)
2) நிகண்டு (Thesaurus)
3) அஞ்சல் ஒன்றிணைப்பு (Mail merge)
4) பிரதியெடுத்தல் (Copy)

www.ikedu.lk

22. பின்வருவனவற்றுள் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளாக அமையாதது எது?

1) Microsoft office word 2) Iwork
3) Excel 4) Libre office writer

23. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளின் ஆவணமொன்றின் கோப்பு நீட்சி எது?

1) exe 2) docx 3) jpg 4) xls

24. Libre office writer இல் ஒரு புதிய ஆவணம் ஒன்றை திறப்பதற்கு பயன்படும் வழிமுறை எது?


1) File → New → Blank document
2) File → Blank document
3) File → Open
4) File → New → Text document

25. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளை பயன்படுத்தி ஆவணங்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் சொற்களுக்குப் பதிலாக அதன் கருத்துக்கள் உடைய வேறு சொற்களைப் பயன்படுத்த தேவையான கருவி எது?

1) நிகண்டு (Thesaurus)
2) பிரதியெடுத்தல் (Copy)
3) சொற்களை தேடுதலும் மாற்றியமைத்தலும் (Find & Replace)
4) அஞ்சல் ஒன்றிணைப்பு (Mail merge)

பகுதி–II

1. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருள் மூலம் ஆவணம் ஒன்றை உருவாக்கி அதனை கீழே 1 தொடக்கம் 4 வரையான எண்களால் காட்டப்பட்டுள்ளவாறு வடிவமைத்தால்.



கீழே சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் காணப்படும் சில வடிவமைத்தல் கருவிகள் A தொடக்கம் H வரையான முகப்படையாளங்களுடன் கீழே தரப்பட்டுள்ளது.



1 – 4 வரையான செயற்பாட்டிற்குரிய வடிவமைப்புக் கருவிகளின் எழுத்துக்களை தொடர்புபடுத்துக.

www.ikedu.lk

02. A தொடக்கம் D வரை முகப்பு அடையாளமிடப்பட்டுள்ள பின்வரும் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருள் பற்றிய கூற்றுக்களுள் சரியானதை சரி எனவும் பிழையானதை பிழை எனவும் குறிப்பிடுக.உமது விடைத்தாளில் முகப்பு அடையாளங்களையும் அதற்குரிய விடைகளையும் மாத்திரம் எழுதுக.

A. புதிய ஆவணம் ஒன்றை சேமிப்பதற்கு File → Save As ஐ கையாளல் வேண்டும்.
B. புதிய ஆவணம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு Ctrl + P எனும் குறுக்குவழிச்சாவி பயன்படுத்தப்படுகிறது.
C. உரிய சொல்லின் மீது சுட்டியினால் இரட்டை சொடக்கல் (Double Click) செய்யும் போது அவ் வசனம் ஆனது தெரிவு செய்யப்படும்
D. மீ இணைப்பை பெற்று பெற்றுக்கொள்வதற்கு Ctrl + K எனும் குறுக்குவழிச்சாவி பயன்படுத்தப்படுகிறது

03. ஒரு சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் கீழே காட்டப்பட்டுள்ளது.



மேலுள்ள ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கருவிகளைப் பெயரிடுக?

1. A என முகப்பு அடையாளமிடப்பட்டவாறு ஆவணத்தின் தலைப்பை வடிவமைத்தல்.

2. B இனால் காட்டப்பட்டுள்ளவாறு விம்பத்தை உள்ளீடு செய்தல்

3. C இனால் காட்டப்பட்டுள்ளவாறு எழுத்தின் வடிவத்தைப் பெறல்


4. D என முகப்பு அடையாளமிடப்பட்ட சொற்களின் பகுதியிலுள்ள குண்டுப்பட்டியலின் வடிவத்தைப் பெறல்.

5. E இனால் காட்டப்பட்டுள்ளவாறு சொற்றொடரின் தோற்றத்தைப் பெறல்

6. F இனால் காட்டப்பட்டுள்ள சொற்றொடரை மீயிணைப்பாகப் பெறல்.

www.ikedu.lk

04. ஒரு சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் கீழே காட்டப்பட்டுள்ளது



A தொடக்கம் **I** வரையான எழுத்துக்களினால் முகப்படையாளங்கள் இடப்பட்டுள்ள ஒவ்வொரு பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்ட கருவியை / கருவிகளை எழுதுக.

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945
LEARN EASY KNOWLEDGE IS POWER
www.lkedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

அலகு: 06 - சொல் முறைவழிப்படுத்தல்
விடைகள்
பகுதி–I

வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை
1	2	**6**	1	**11**	3	**16**	2	**21**	2
2	4	**7**	4	**12**	2	**17**	2	**22**	3
3	1	**8**	3	**13**	1	**18**	1	**23**	2
4	4	**9**	1	**14**	4	**19**	2	**24**	4
5	1	**10**	2	**15**	4	**20**	1	**25**	1

பகுதி–II

1. 1 - F
   2 - H
   3 - A
   4 - C

2. A – பிழை
   B – பிழை
   C – பிழை
   D – சரி

3. 1 – Bold
   2 – Insert ---- Picture
   3 – Dropcap
   4 - Bullets
   5 - Italic, Bold
   6 - Insert --- Hyperlink

4. A – WordArt
   B – Insert ---- Picture
   C – Dropcap
   D – Spacing
   E – Column
   F – Clipart
   G – Underline
   H – Numbering
   I – Hyperlink

www.lkedu.lk

அலகு: 07 - இலத்திரனியல் விரிதாள்கள்

பகுதி–I

1. இலத்திரனியல் விரிவுத்தாள் பிரயோக மென்பொருளுக்கு உதாரணமாக அமையாதது?
   1) Numbers 2)Libre Office Calc
   3) Ms Excel 4) iwork Pages


2. இலத்திரனியல் விரிவுத்தாள் மென்பொருளின் கோப்புநீட்சியாது?
   1).xlsx 2).exls 3).xsls 4).xslx

3. இரு பரிமாணத் தளத்தில் நிரல்கள் மற்றும் நிரைகள் என்றவாறு அமையப் பெற்ற கலங்களின் தொகுப்புக்களைக் கொண்டு நிருமாணிக்கப்பட்டதுஎவை?
   1)கலம்(Cell) 2)நிரல்கள்(Columns) 3)பணித்தாள்(WorkSheet) 4)நிரைகள்(Rows)

4. Micro Soft Excel 2010 இல் காணப்படும் நிரைகள்,நிரல்களின் எண்ணிக்கைளை இரண்டின் அடுக்குகளில் தருக?
   1)2^{16}, 2^{8} 2).2^{20},2^{14} 3)2^{20},2^{10} 4)2^{16},2^{10}

5. A1 கலத்தினை நோக்கி நகர்வதற்கு பயன்படும் சாவி எது?
   1)Home 2)Ctrl+ Home 3) Page Up 4)Ctrl+Arrow key

6. கீழேகாட்டப்பட்டுள்ள பணித்தாளினை அவதானித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக?



I. R1 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முதலாவது கலத்தின் முகவரி யாது?
II. R1 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இறுதி கலத்தின் முகவரி யாது?
III. R1 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள கலவீச்சை எழுதுக?
IV. R2 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முதலாவது கலத்தின் முகவரி யாது?
V. R2 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இறுதிகலத்தின் முகவரியாது?
VI. R2 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளகலவீச்சைஎழுதுக?
VII. R3 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமுதலாவதுகலத்தின் முகவரியாது?
VIII. R3 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இறுதிகலத்தின் முகவரியாது?
IX. R3 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள கலவீச்சைஎழுதுக?
X. வரி ஒன்றினூடாக உள்ளகலவீச்சின் பெயர் என்ன?
XI. நிரல் ஒன்றினூடாக உள்ளகலவீச்சின் பெயர் என்ன?
XII. R3 இனால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வீச்சிலுள்ள கலங்களின் எண்ணிக்கை யாது?

www.ikedu.lk

7. பின்வரும் சமன்பாடுகளை தீர்க்க?


சமன்பாடுகள்	பெறுபேறு
1. =10-6/3	
2. =10*4+7	
3. =2+5*5	
4. =3^2+15	
5. =5+9^2	
6. =8+5*2^4	
7. =10/5*2	
8. = -6/3+2	
9. =1+3^3*2	
10. =2*8/2	
11. =10/2+1^3*5	
12. =3-5*3/3	
13. =9/3*2^1-3	
14. =4*(4+6)/10+1	
15. =3^2/(5-1^3)*5	

8. பின்வரும் கலமுகவரிகளில் பிழையானது எது?
1)$A$3 2)$A3 3)A$3 4)$A3$

9. நிரல் முற்றுறு கலமுகவரிக்கு உதாரணமாக அமைவது எது?
1)$A1+$B1 2)A$1+B$1 3)$A1+B$1 4)A1+ B$1

10. =4+2*2^3/(6-4) எனும் சூத்திரத்திரம் இலத்திரனியல் விரிதாள் கலமொன்றில் எழுதப்பட்டுள்ளது. இதன் வருவிளைவு யாது?
1) 10 2)12 3)15 4) 36

11. கீழே காட்டப்பட்டுள்ளபணித்தாளையும்,அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரங்களையும் கருத்தில் கொண்டு முன்னுரிமைப்படி கணிப்பீடு செய்து பெறப்படும் பெறுமானங்களை பெறுமான நிரலில் எழுதுக?




A	B	C	D	E
1	7	5	4	2	
2	3	10	9	4	
3	5	2	4	8	
4					
5					
6					
7					

இல	சூத்திரம்	பெறுபேறு
1	=A1*B1-D2	
2	=D1-C2/A2	
3	=B3^C3-A3	
4	=A1*C1/C3	
5	=D2*C3*E1	
6	=A3/B3+A2*D1	
7	=A1+(B2*C2)-B3+C2/B2	
8	=B2-B3+B1*(D1+D2^B1)	
9	=A2^B3-C2+A3*(B3+C1)	
10	=A3/C3*(D2*D1)	

www.ikedu.lk

12. பணித்தாள் ஒன்றின் பகுதி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. A5 என்ற கலமானது =$A$2+A3 என்ற சூத்திரத்தைக் கொண்டுள்ளது. இச்சூத்திரத்தை B5 என் கலத்தினுள் உள்ளீடு செய்யும் போது அதன் வெளியீடானது எவ்வாறு அமையும்.

1) 8 2) 14 3) 9 4) 16



	A	B	C
1			
2	3	8	
3	10	6	
4	5	2	
5	13		
6			

13. பின்வரும் SUM சார்புகளில் பிழையான சார்பு யாது?

1)=Sum(A1,B1,C1) 2)=Sum(A1:C1,B2)

3)=Sum(A1.B1,C1) 4)=Sum(A1:A3,C1:C3)

14. கீழே தரப்படுகின்ற சார்புகளைக் கருதுக.

A. =Average(A3:C8)

B. =Sum(A3:C8)

C. =Max(A3:C8)

D. =Min(A3:C8,E9)

சரியான சார்பினைத் தெரிவு செய்க.

1)Bமட்டும் 2)A,B,Dமட்டும் 3)A,Cமட்டும் 4)மேலுள்ளஅனைத்தும்

15. கலவீச்சில் உள்ள கலங்களின் எண்ணிக்கையினை அறிவதற்கு பயன்படும் சார்பு யாது?

1)=sum() 2)=total() 3)count() 4)=count()

16. சூத்திரங்களை பிரதி செய்வதற்கான Copy,Paste ஐ பயன்படுத்தும் முறை கீழே தரப்பட்டுள்ளது அவற்றுள் சரியான ஒழுங்கு யாது?

A.சூத்திரத்தை உள்ளடங்கிய கலத்தினை தெரிதல்


B.தெரிவு செய்யப்பட்ட கலத்திலுள்ள உள்ளடக்கத்தை பிரதி செய்து கொள்ளல்.(Ctrl+C)

C.பிரதி செய்வதற்கானகலம்/கலவீச்கைதெரிதல்

D.தெரிவு செய்யப்பட்டகலம்/கலவீச்சில் ஒட்டுதல்(Paste/Ctrl+V)

1)A,C,B,D 2)A,B,C,D 3)C,B,A,D 4)C,A,B,D

17. கீழே தரப்பட்டுள்ளவிரிதாள் பகுதியில் கலம் A4 இல் =$A2+A3எனும் சூத்திரம் காணப்படுகின்றது.



	A	B	C
1			
2	3	4	
3	2	3	
4	5		
5			

இச் சூத்திரத்தைகலம் B4 இற்குநகல் செய்தால் B4 காட்சிப்படுத்தப்படும் பெறுமானம் யாது?

1)5 2)6 3)7 4)8

18. விரிதாள் பொதி ஒன்றில்,ஒரு குறிப்பிட்ட கலவீச்சில் தரம் (rank) கணிப்பிடப்பட வேண்டியுள்ளது. பின்வருவனவற்றுள் அதற்கான சரியான வடிவம் யாது?

1) =Rank (A$1:A$5) 2) = Rank (A1, A1:A5)

3)= Rank (A1, $A$1:$A$5) 4) = Rank (A1:A5)

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

19. இலத்திரனியல் விரிதாள்(Spread sheet) கலத்தினுள்ளே "#Value" என காட்சிப்படுத்துமாயின் அதற்கான காரணம் என்ன?

1)உள்ளிடக்கப்பட்ட சூத்திரத்தில் குறைபாடுகள் காணப்படல்

2)தரவுகளை உட்செலுத்த கலத்தில் போதியளவு இடமின்மை

3)இலக்கமொன்றை பூச்சியத்தால் பிரித்ததனால்

4)உள்ளடக்கப்பட்ட பெயரையோ,பெறுமானத்தையோ இனங்காண முடியாமை

20. இலத்திரனியல் விரிதாளில் சனத்தொகை இன விகிதாசாரக் கட்டமைப்பைக் காட்டுவதற்குப் பொருத்தமான வரைபு வகை?

1)சலாகை வரைபு 2)கோட்டு வரைபு

3)வட்ட வரைபு 4)நிரல் வரைபு

பகுதி–II

01. ஒரு பாடசாலையினுடைய மூன்று வருடங்களுக்கான வருமானம் மற்றும் செலவீனம் என்பவற்றை உள்ளடக்கிய விரிதாள் ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

	A	B	C	D	E
1	**Income**				
2		**2017**	**2018**	**2019**	
3	Facilitation Service Fees	75000	73000	77000	
4	OB Donation	15000	11000	14500	
5	Well-Wishers Donation	14000	15000	16000	
6	Quality Inputs	100500	110000	125000	
7	**Total Income**				
8					
9	**Expenditure**				
10	Electricity Bill	12500	14130	12200	
11	Sports	8000	12500	13500	
12	Maintenance	14000	12000	16000	
13	Purchase	45000	62000	85000	
14	**Total Expenditure**				
15					

A. 2018 ஆம் ஆண்டிற்குரிய மொத்த வருமானத்தைக் கணிப்பதற்கு C7 கலத்தில் உள்ளிட வேண்டிய சூத்திரத்தை எழுதுக?.

B. 2019 ஆம் ஆண்டிற்குரிய மொத்த வருமானத்தைக் (Total Income) கணிப்பதற்கு D7 கலத்தினுள் மேலேயுள்ள சூத்திரத்தை பிரதிசெய்தால், அது எவ்வாறு தோற்றமளிக்கும்?

C. 2017 இலிருந்த 2019 ஆம் ஆண்டிற்கான Quality Inputs அதிகரிப்பை கணிப்பதற்க F6 கலத்தினுள் உள்ளிடவேண்டிய சூத்திரத்தை எழுதுக?.

II. விரிதாளுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களை சரியாயின் சரி எனவும்,பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

A. இலக்கத்தரவுகளினுடைய ஒரு கலவீச்சானது ஏறுவரிசை அல்லது இறங்குவரிசையில் ஒழுங்குபடுத்த முடியும். (…….)

B. பல கலங்களை ஒரு தனிக்கலமாகச் சேர்க்க முடியாது. (…….)

www.ictcu.lk

02. திரு.ராகுல் என்பவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார்.இவர் தனது மனைவியுடன் வாடகை வீட்டில் வசித்து வருகின்றார்.அவரது இரு பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருகின்றார்கள்.அவர்கள் மாதந்தோறும் 50 அமெரிக்கடொலர்(US $) இனை தமது பெற்றோரின் வாழ்க்கைச் செலவிற்கு அனுப்புகின்றனர். அத்துடன் அவர் ஓய்வூதியம்(Pension) பெறுவதுடன் தனது கிராமத்தில் உள்ள ஏழை மக்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க கட்டணத்துடன் ஆங்கில வகுப்புக்களை நடாத்தியும் பணத்தை உழைக்கின்றார். மற்றும் வங்கியில் உள்ள நிலையான வைப்பின் மூலம் கிடைக்கும் வட்டியையும் பெற்றுக்கொள்கின்றார். ஒவ்வொரு மாத முடிவிலும் அமெரிக்கடொலர்(US $) ஐ இலங்கை ரூபா (LKR)க்கு மாற்றி வங்கியில் இருந்து பெற்றுகொள்கிறார் அவர் தனது மாதாந்த வருமானங்களையும் செலவீனங்களையும் பின்வருமாறு பணித்தாள் ஒன்றில் நுழைக்கின்றார். அவர் பணித்தாளினை பூர்த்திசெய்து அச்சுப்பிரதியினை பெறுகின்றார்.

	A	B	C	D
1	**மாதாந்த வரவு செலவு அறிக்கை-பங்குனி 2020**			
2	விபரம்	வரவு (LKR)	விபரம்	செலவு (LKR)
3	ஓய்வூதியம்	8000.00	வாடகை	4000.00
4	ஆங்கில வகுப்பு	7500.00	உணவு	5500.00
5	நிலையான வைப்பு வட்டி	500.00	போக்குவரத்து	1100.00
6	பிள்ளைகளிடம் அனுப்பும் பணம்	9250.00	மருத்துவம்	800.00
7			தனிப்பட்ட	2700.00
8			சமூகசேவை	855.00
9			ஏனையவை	4835.00
10				
11	மொத்த வருமானம்	25250.00		
12	மொத்த செலவு	19790.00	**ஒரு அமெரிக்க டொலர்**	**185.00**
13	சேமிப்பு	5460.00	**பிள்ளைகள் அனுப்பும் பணம் (அமெரிக்க டொலர்)**	**50**
14	சேமிப்பு வீதம்	21.6		
15				

பின்வரும் தகவல்களைப் உருவாக்க பொருத்தமான கலங்களில் எழுதவேண்டிய சூத்திரம் சார்பினை தருக.

i. பிள்ளைகளிடம் இருந்து பெற்ற பணத்தினை ரூபாயில் கலம் B6 இல் காட்டுவதற்குரிய சூத்திரத்தினை எழுதுக.

ii. மொத்த மாதாந்த வருமானத்தை கலம் B11இல் காட்சிப்படுத்த தேவையான சூத்திரத்தினை சார்பினை பயன்படுத்தி எழுதுக.

iii. மொத்த மாதாந்த செலவீனத்தினை கலம் B12இல் காட்சிப்படுத்த தேவையான சூத்திரத்தினை சார்பினை பயன்படுத்தி எழுதுக.

iv. மாதாந்த சேமிப்பினை கலம் B13 இல் காட்டத்தேவையான சூத்திரத்தினைத்தருக.(**சேமிப்பு என்பது மொத்த வருமானத்தில் இருந்து மொத்த செலவை கழிப்பதன் மூலம் பெறப்படுவது ஆகும்**)

v. மொத்த வருமானத்தில் சேமிப்பு எத்தனை சதவீதம் எனகலம்B14 இல் பெற தேவையான சூத்திரத்தினை தருக.
(**சேமிப்பு வீதம்=(சேமிப்பு/மொத்த வருமானம்)*100**)

www.ictec.lk

03. “ABC”நிறுவனத்தின் ஊழியர்களின் March மாத சம்பளப்பட்டியல் அடங்கிய விரிதாள் மென்பொருளின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

Book2.xlsx

	A	B	C	D	E	F
1						
2	**ABC Company**					
3	**Normal Working hours per week**			**40**	**Hourly Rate**	**300**
4	**E.ID**	**E.Name**	**Hours Worked**	**Basic Salary**	**OT**	**Total Payment**
5	E001	Ravi	46	12000.00	2700.00	14700.00
6	E002	Ratha	41	12000.00	450.00	12450.00
7	E003	Raju	40	12000.00	0.00	12000.00
8	E004	Rani	45	12000.00	2250.00	14250.00
9					**Grand Total**	**53400.00**
10						
11						

நிறுவனத்தில் சாதாரணமாக ஒரு ஊழியர் 40 மணித்தியாலங்கள் வேலை செய்தல் (Normal working hours per week)வேண்டும். 40 மணித்தியாலங்களிற்கு மேல் வேலை செய்தால் மேலதிக மணித்தியால சம்பளம் (OT) E5இல் இடப்படும். இது சாதாரண மணித்தியால சம்பளத்தின் (Hourly Rate) ஒன்றரை பங்கு ஆகும்.

I. அடிப்படை சம்பளத்தை (Basic Salary) இனை D5 இல் காண்பதற்கான சூத்திரத்தினை தருக?

II. E001எனும் ஊழியருக்கான OT இனை காண்பதற்கான சூத்திரத்தினை தருக?

III. ஏனைய ஊழியர்களுக்கான OT இனை காண்பதற்குரிய படிமுறைகளை தருக?

IV. E001 எனும் ஊழியருக்கான Total Payment இனைக் F5 காண்பதற்கான சூத்திரத்தைத்தருக?

V. அனைத்து ஊழியர்களுக்குமான சம்பளத்தின் கூட்டுத்தொகையினை(Grand Total) F9 இல் காண்பதற்கான சார்பினைத் தருக?

www.ictedu.lk

04. கீழே காட்டப்பட்டுள்ள விரிதாள் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விபரம் காட்டப்பட்டுள்ளது.

	A	B	C	D	E
1	**பொருட்கள்**	**ஒன்றின் விலை**	**எண்ணிக்கை**	**பெறுமதி**	**விற்பனை விலை**
2	வடை	25.00	60		
3	மோதகம்	30.00	28		
4	கேக்	15.00	150		
5	பற்றிஸ்	20.00	75		
6	கட்லட்	25.00	55		
7	மொத்தம்				
8	**இலாபவீதம்**	**10%**			

I. மொத்தமாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து உணவுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கையைக் காண்பதற்கு கலம் C7ல் எழுத வேண்டிய சார்பை தருக.

II. வடை இற்குரிய பெறுமதியைக் காண்பதற்கு கலம் D2இல் எழுத வேண்டிய சூத்திரத்தை எழுதுக.

III. ஏனைய பொருட்களுக்குரிய பெறுமதியைக் காண்பதற்கான படிமுறையை எழுதுக

IV. மொத்த பெறுமதியைக் காண்பதற்கான சார்பை கலம் D7ல் எழுதுக.

V. பொருள் ஒன்றின் விலையின் 10% இலாபம் வைத்து பொருட்கள் விற்பனை செய்யப்படுமாயின் கலம் E2ல் எழுத வேண்டிய சூத்திரத்தை எழுதுக.

05. மாணவர்கள் தவணைப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் பின்வரும் விரிதாளில் காட்டப்பட்டுள்ளது.

	A	B	C	D	E	F	G	H
1	**Term Mark sheet-2019**							
2	**Name**	**Tamil**	**Maths**	**Science**	**English**	**ICT**	**Total**	**Average**
3	Kirushika	85	78	53	78	73		
4	Kalyani	79	98	62	88	68		
5	Thushayini	65	65	64	95	94		
6	Kayalvili	45	45	61	76	71		
7	Shainthavi	55	62	48	55	82		
8	Tharsha	80	42	55	65	65		
9	Kaveri	92	63	46	56	63		
10	Mathushalini	67	45	66	75	70		
11	Maximum							
12	Minimum							
13	Count							

1. Kirushika எனும் மாணவி பெற்ற மொத்தப் புள்ளியைக்கணிப்பதற்குகலம் G3 இல் எழுதப்பட வேண்டிய விரிதாள் சார்பை எழுதுக?.
2. மேலே கலம் G3 இல் எழுதப்பட்டசார்பினைப் பயன்படுத்தி ஏனைய மாணவர்களது மொத்தப் புள்ளியை கணிப்பதற்கான படிமுறையைத் தருக?
3. Kalyani எனும் மாணவியின் சராசரிப் புள்ளியக் கணிப்பதற்கு கலம் H6 இல் எழுதப்பட வேண்டிய விரிதாள் சார்பு யாது?
4. மேலே கலம் H6 இல் எழுதப்பட்ட சார்பினை கலம் H7 இற்குப் பிரதி செய்தால் கலம் H7 இல் காட்சிப்படுத்தப்படும் சார்பு யாது?
5. ICT பாடத்தில் மாணவர்கள் பெற்ற உயர் புள்ளியைக் கணிப்பதற்கு கலம் F11 இல் எழுதப்பட வேண்டிய விரிதாள் சார்பு யாது?

www.ictedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

II.விரிதாள் பற்றிய பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் குறிப்பிடுக.

1. இலத்திரனியல் விரிதாளில் ஒருகலத்தை மட்டும் உருப்பெருக்கம் செய்யமுடியும்.
2. சூத்திரத்தினைப் பயன்படுத்தி வருவிளைவு பெறப்பட்ட கலத்தில் F2சாவியைப் பயன்படுத்துவதன் மூலம் சூத்திரத்தில் மாற்றங்களைச் செய்யலாம்.
3. சூத்திரங்களைப் அடுத்துவரும் கலங்களுக்கு பிரதிசெய்யும் போது சார்பற்ற கலமுகவரிகள் மாற்றமடைகின்றன.
4. Pagedown சாவியினைப் பயன்படுத்துவதன் மூலம் விரிதாளில் ஒரு திரையை கீழாக நகாத்தலாம்.
5. சூத்திரத்திற்கு முன் = பதிலாக + குறியீட்டினைப் பயன்படுத்தியும் வருவிளைவைப் பெறமுடியும்.
06. இலங்கை அரசாங்கத்தின் 2018, 2019ம் ஆண்டுக்கான துறை ரீதியான வருமானங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

	A	B	C	D	E
1			மில்லியனில்		மாற்று
2		துறைகள்	2018	2019	சதவீதம்
3		**விவசாயம்**			
4		பெருந்தோட்டம்	4520	4630	
5		கால்நடை	2360	2900	
6		மீன்பிடி	1230	1560	
7		**கைத்தொழில்**			
8		கட்டிடம்	45624	42000	
9		வீதி அபிவிருத்தி	25630	32100	
10		**சேவைகள்**			
11		வங்கி	65236	69523	
12		வெளிநாட்டு வேலை வாய்ப்பு	7895	7756	
13		சுற்றுலாத்துறை	5986	6523	
14		**மொத்தம்**			

மேலே தரப்பட்ட விரிதாள் கூறைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

I. 2019 விவசாயத் துறையில் பெற்றுக் கொண்ட மொத்த வருமானத்தைக் கணிப்பதற்காக பெருந்தோட்டம்,கால்நடை,மீன்பிடி ஆகிய துறைகளில் பெற்றுக்கொண்ட வருமானங்களை கூட்டி கலம் D3யில் காட்டுவதற்கான பொருத்தமான சூத்திரத்தை தருக.

II. பெருந்தோட்டதுறையின் வருமான மாற்றத்தைக் கணிப்பதற்கான சூத்திரத்தினை கலம் E4வில் தருக.

(மாற்றல் சதவீதம் =(2018ம் ஆண்டிற்கான துறைக்கானவருமானம் - 2019ம் ஆண்டிற்கானதுறைகக்னவருமானம்)/2018ம்ஆண்டிற்கான துறைக்கானவருமானம் X 100)

III. கலம் E4வில் கணித்த சூத்திரத்தினை ஒவ்வொரு துறைகளுக்கும் கணிப்பதற்கான படிமுறையினைத் தருக.

IV. 2018ல் ஒவ்வொருதுறையும் மொத்தவருமானத்தில் எவ்வாறான பங்களிப்பினை ஆற்றியுள்ளது என்பதினைக் விபரிப்பதற்கான பொருத்தமான வரைபடத்தைப் பெயரிடுக.

www.ikeau.lk

7.பின்வரும் விரிதாளின் பகுதியானது 5 வருடங்களில் G.C.E. (O/L) மற்றும் G.C.E.(A/L) தோற்றிய மாணவர்களின் பகுப்பாய்வினைக் காட்டுகின்றது.

	A	B	C	D	E	F	G	H
1								
2	G.C.E(O/L) AND G.C.E (A/L) EXAMINATION-ANALYSIS							
3		2015	2016	2017	2018	2019	Total	Maximum
4	School Candidates sat for the G.C.E(O/L)	348,143	352,475	287,040	277,414	290,929		
5	Private Candidates sat for the G.C.E(O/L)	95,155	98,564	21,014	21,135	23,706		
6	All Candidates sat for the G.C.E(O/L)	443,298	451,039	308,054	298,549	314,635		
7	School Candidates sat for the G.C.E(A/L)	203,928	196,954	209,906	207,304	210,340		
8	Private Candidates sat for the G.C.E(A/L)	35,847	36,680	31,723	40,072	44,851		
9	All Candidates sat for the G.C.E(A/L)	239,775	233,634	241,629	247,376	255,191		
10								

கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு மேலுள்ள விரிதாளின் பகுதியினைப் பயன்படுத்துக:

I. 2015 இலிருந்து 2019 வரை GCE (O/L) பரீட்சையில் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகத் தோற்றியோரின் மொத்த எண்ணிக்கையினைக் கலம் G4 ல் காட்சிப்படுத்துவதற்குரிய ஓர் சூத்திரத்தினை தனித்த சார்பினைப் பயன்படுத்தி எழுதுக.

II. 2015 இலிருந்து 2019 வரை GCE (O/L) பரீட்சையில் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகத் தோற்றியோரின் அதிகூடிய எண்ணிக்கையினைக் கலம் H5ல் காட்சிப்படுத்துவதற்குரிய ஓர் சூத்திரத்தினை தனித்த சார்பினைப் பயன்படுத்தி எழுதுக.

III. F7 மற்றும் F10 ஆகிய கல முகவரிகளைப் பயன்படுத்தி, 2015 ஆம் ஆண்டில் GCE (O/L) மற்றும் GCE (A/L)ஆகிய பரீட்சைகளில் பரீட்சார்த்திகளாகத் தோற்றியோரின் மொத்த எண்ணிக்கையின் வேறுபாட்டினைக் கணிப்பதற்கு ஓர் சூத்திரத்தினை சார்பினைப் பயன்படுத்தாமல் எழுதுக.

IV. 2015 இலிருந்து 2019 வரை GCE (O/L)மற்றும் GCE (A/L)ஆகிய பரீட்சைகளில் பரீட்சார்த்திகளாகத் தோற்றியோரின் மொத்த எண்ணிக்கையினை ஒப்பிடுவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய இரு வரைபடங்களை (charts) எழுதுக.

www.ikedu.lk

8. Smarty Life என்பது ஒரு சிறிய வணிக நிறுவனமாகும். அங்கு பணிபுரியும் ஊழியர்களின் மாதாந்த சம்பளப் பட்டியலை தயாரிப்பதற்காக ஒரு இலத்திரனியல் விரிதாள் பயன்படுத்தப்படுகின்றது. அதற்காக பயன்படுத்தப்பட்ட விரிதாளின் ஒரு பகுதி கீழே காட்டப்பட்டுளள்து.

	A	B	C	D	E	F	G
1	**Smarty Life Organization**						
2	**Payment**	**Jan.20**					
3	**Normal Working Hours per Week**			**40**			
4	**E.Code**	**Name**	**Hourse Worked**	**Hourly Rate**	**OT Rate**	**OT Hrs**	**Total Pay**
5	C0010	Jitheen	46	Rs.200.00	Rs.300.00	6	Rs.9 800.00
6	C0011	Saruji	54	Rs.200.00	Rs.300.00	14	Rs.12 200.00
7	C0012	Danika	55	Rs.200.00	Rs.300.00	15	Rs.12 500.00
8	C0013	Gasvitha	50	Rs.250.00	Rs.375.00	10	Rs.13 750.00
9	C0014	Amshini	42	Rs.275.00	Rs.412.50	2	Rs.11 825.00
10	C0015	Hasmika	40	Rs.275.00	Rs.412.50	0	Rs.11 000.00
11					**Grand Total**		**Rs.71 075.00**
12							

இங்கு ஊழியர்கள் வாரமொன்றுகக்கு 40 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் (cell D3 இல் காட்டப்பட்டுள்ளது) அவர்கள் வேலை செய்த மணித்தியாலம் C5:C10எனும் Cellவீச்சிலும் ஒரு மணித்தியாலத்திற்கு செலுத்தும் தொகை(hourly Rate) D5:D10 வீச்சிலும் காட்டப்பட்டுள்ளது. மேலதிக வேலைக்காக ஒரு மணித்தியாலத்திற்கு செலுத்தும் தொகை(OT rate)பொதுவான ஒரு மணிதொகையின்(Hourly rate) 3/2 பங்காகும்.

I. OT Rate ஐ கணிப்பதற்கு சூத்திரத்தை E5 இல் எழுதுக?.

II. மேலதிக நேர மணித்தயாலங்களை (OT Hours) கணிப்பதற்கு F5 இல் சூத்திரத்தை எழுதுக. (ஏனையவற்றிற்கும் பிரதி செய்து கணிக்கக் கூடியவாறு அமைதல் வேண்டும்.)

III. Total pay காண்பதற்குரிய சூத்திரத்தை G5 இல் எழுதுக?.

IV. G5 இல் கண்ட விடையினைக் கொண்டு G5:G10 வரை Total ஐ காண்பதற்குரிய படிமுறையை எழுதுக ?

www.ictgu.lk

9.“Atlas Axillia Co(Pvt) Ltd”என்பது உள்நாட்டு வாசணைத் திரவியங்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபார நிறுவனமாகும். இந்நிறுவனம் அங்கு வேலைசெய்யும் ஊழியர்களின் சம்பளப் பட்டியலைத் தயார் செய்வதற்காக பணித்தாள் மென்பொருளினை(Spreadsheet application) உபயோகிக்கின்றது. அதன் வடிவமைப்பு கீழே தரப்படுகின்றது.

Book3.xlsx

	A	B	C	D	E	F
1	**Atlas Axillia Co (Pvt) Ltd**					
2	**Monthly Employee Payments-April-2020**					
3	E.No	E.Name	Basic Salary	Bata Payment	EPF	Net Salary
4	E001	S.Aruna	15000.00	25000.00		
5	E002	R.Priya	18000.00	2000.00		
6	E003	T.Rajitha	19500.00			
7	E004	T.Sanchu	25000.00			
8	E005	R.Raviraj	30000.00	3000.00		
9					**Total of Salaries**	
10		**Number of Employee who are having bata payment**				
11		**EPF**	**8%**			

I. கம்பனியானது ஊழியர் இலக்கம் (E.No) E001 ஐக் கொண்ட S.Aruna என்பவரின் சம்பளத்திலிருந்து 8% ஐ ஊழியர் சேமலாபநிதிக்காகப் (EPF)பெற்றுக் கொள்கின்றது. ஊழியர் சேமலாபநிதித் தொகையை(EPF) E4 கலத்தில் கணிப்பதற்கான சூத்திரத்தை (Formula) தருக.

II. ஊழியர் இலக்கம் (E.no) E001 ஐக் கொண்ட S.Aruna என்பவரின் தேறிய சம்பளத்தைக் (Net Salary) காண்பதற்காக F4 கலத்தில் இடப்பட வேண்டிய சூத்திரத்தை (Formula) தருக? **(தேறியசம்பளமானது (Net Salary) ஆரம்பசம்பளத்தோடு (Basic Salary) போக்குவரத்துக்கானகொடுப்பனவைக் (Bata Payments) கூட்டி ஊழியர் சேமலாபநிதித் தொகையை(EPF) கழிக்க் வரும் பெறுமதியாகும்)**

III. தேறியசம்பளங்களின் (Net Salary) மொத்த கூட்டுத் தொகையைக் காண்பதற்காகF9 கலத்தில் இடப்பட வேண்டிய சார்பைத் (Function)தருக.

IV. போக்குவரத்து கொடுப்பனவை (Bata Payments) பெறுபவர்களின் எண்ணிக்கையைக் காண்பதற்காக F10 கலத்தில் இடப்பட வேண்டிய சார்பைத் (Function) தருக.

V. ஊழியர்களின் தேறிய சம்பளங்களை(Net Salary) விளக்கமாக்காட்டுவதற்காக பணித்தாளில் பயன்படுத்தக்கூடிய இரு வரைபுகளின் (Charts) பெயர்களைத் தருக.

www.ikeon.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

10.Indra Traders நிறுவனத்தில் இடம் பெற்ற April மாதத்திற்கான கார்களின் விற்பனை விபரம் கீழே உள்ள விரிதாள் (Spread sheet) மென்பொருளின் பணித்தாளில் காடட்டப்பட்டுள்ளது.

Book1

	A	B	C	D	E	F	G
1	**Indra Traders Car Sales :Month of April**					**Discount**	**12.50%**
2	**Item**	**Quantity**	**Price**	**Tax**	**Discount**	**Advance**	**Financial Amount**
3	Prius	50	2000000.00			1100000.00	
4	Honda Vazzel	120	2500000.00			1200000.00	
5	Primeo	63	2355000.00			1350000.00	
6	Vitz Car	23	1800000.00			1000000.00	
7	Grace	100	2200000.00			1400000.00	
8	Alto	150	1500000.00			1000000.00	
9	**Sum of Total**						
10	**Maximum**						
11	**Minimum**						
12				**Government Tax**		**175%**	
13							

குறிப்பு:

•Tax ஆனது குறித்த ஒவ்வொரு கார் இனதும் Price ல் கணிக்கப்படுகின்றது இதற்காக நீங்கள் கலம் (Cell) F12 ல் தரப்பட்டுள்ள 175% பயன்படுத்துதல் வேண்டும்

•Discount ஆனது குறித்த ஒவ்வொருகார் இற்கும் செலுத்தப்பட்ட Advance விலையில் கணிக்கப்படுகின்றது இதற்காக நீங்கள் கலம் (Cell) G1ல் தரப்பட்டுள்ள 12.50% பயன்படுத்ததுதல் வேண்டும்

•Financial Amount ஆனது Financial Amount = (Price + Tax) - (Discount+ Advance) எனும் அடிப்படையில் கணிக்கப்படுகிறது

I. கலம்(Cell) D3 ல் Prius Car இற்கான Tax இனை கணிப்பதற்கு தேவையான சூத்திரத்தினை(Formula) எழுதுக

II. கலம் (Cell) E6 ல் Vitz Car இற்கான Discount இனை கணிப்பதற்கு தேவையான சூத்திரத்தினை (Formula) எழுதுக

III. கலம் (Cell) B9 ல் விற்பனையாகிய மொத்த கார்களின் எண்ணிக்கை இனை கணிப்பதற்கு தேவையான சார்பினை எழுதுக

IV. கலம் (Cell) C10 ல் விற்பனையாகியகார்களில் கூடிய விலையுடைய காரினை கணிப்பதற்கு தேவையான சார்பினை எழுதுக

V. கலம் (Cell) C11ல் விற்பனையாகியகாரக்ளில் குறைந்த விலையுடைய காரினை கணிப்பதற்கு தேவையான சார்பினை எழுதுக

VI. Grace காரின் Financial Amount இனை கணிப்பதற்கு தேவையான சூத்திரத்தினை (Formula) எழுதுக

www.ictcu.lk

அலகு: 07 - இலத்திரனியல் விரிதாள்கள்

விடைகள்

பகுதி–I

1. 4
2. 1
3. 3
4. 2
5. 2
6. i.C2
   ii.G2
   iii.C2:G2
   iv.I1
   v.I10
   vi.I1:I10
   vii.C6
   viii.F9
   ix.c6:F9
   x.R1
   xi.R2
   xii. 16 cells
7. 1.8
   2.47
   3.27
   4.24
   5.86
   6.88
   7.4
   8.0
   9.55
   10.8
   11.10
   12.-2
   13.3
   14.5
   15.11.25
8. 4
9. 1
10. 2
11. 1.31
    2.-1
    3.11
    4.7
    5.0
    6.8.5
    7.95.9
    8.5138
    9.30
    10.10
12. 3
13. 3
14. 4
15. 4
16. 2
17. 2
18. 3
19. 1
20. 3

பகுதி–II

1. I.a.=sum(C3:C6)
   b.=sum(D3:D6)
   c.=D6-B6
   II.a.True
   b.False
2. i.=D12*D13
   ii.=sum(B3:B6)
   iii.=sum(D3:D9)
   iv.=B11 –B12
   v.=B13/B11 *100
3. i.$D$3*$F$3
   ii.=(C5-$D$3)*450 or =(C5-$D$3)*(F3*1.5)
   iii. சூத்திரம் எழுதிய கலம் E5 தெரிவு செய்க பின் கலத்தின் வலப்பக்க கீழ் மூலையில் உள்ள நிரப்புப் பிடியினைத் தெரிவு செய்து தேவையான கலங்கள் ஆன E8 வரை இழுத்து விடுதல்.
   iv.= D5+E5
   v.=sum(F5:F8)

www.lkedu.lk

4. i.=sum(C2:C6)
   ii.=B2*C2
   iii. சூத்திரம் எழுதிய கலம் D2 தெரிவு செய்க பின் கலத்தின் வலப்பக்க கீழ் மூலையில் உள்ள நிரப்புப் பிடியினைத் தெரிவு செய்து தேவையான கலங்கள் ஆன D6 வரை இழுத்து விடுதல்.
   iv.=sum(D2:D6)
   v.=B2+(B2*$B$8)

5. I. i.=sum(B3:F3)
   ii. சூத்திரம் எழுதிய கலம் G3 தெரிவு செய்க பின் கலத்தின் வலப்பக்க கீழ் மூலையில் உள்ள நிரப்புப் பிடியினைத் தெரிவு செய்து தேவையான கலங்கள் ஆன G10 வரை இழுத்து விடுதல்.
   iii.=Average(B6:F6)
   iv= Average(B7:F7)
   v.=max(F3:F10)
   II. i. False
   ii. True
   iii.False
   iv.True
   v.True
6. i.=Sum(D4:D6)
   ii.=(C4-D4)/C4*100
   iii. சூத்திரம் எழுதிய கலம் E4 தெரிவு செய்க பின் கலத்தின் வலப்பக்க கீழ் மூலையில் உள்ள நிரப்புப் பிடியினைத் தெரிவு செய்து தேவையான கலங்கள் ஆன E13 வரை இழுத்து விடுதல்.
   iv.வட்ட வரைபு

7. i.=Sum(B4:F4)
   ii.=max(B4:F4)
   iii.=F7-F10
   iv. நிரல் வரைபு,சலாகை வரைபு

8. i.=D5*3/2
   ii.=C5-$D$2
   iii.=($D$2*D5)+(E5*F5)
   iv. சூத்திரம் எழுதிய கலம் G5 தெரிவு செய்க பின் கலத்தின் வலப்பக்க கீழ் மூலையில் உள்ள நிரப்புப் பிடியினைத் தெரிவு செய்து தேவையான கலங்கள் ஆன G10 வரை இழுத்து விடுதல்.

9. i.=C4*$C$11
   ii.=(C4+D4)-E4
   iii.=Sum(F4:F8)
   iv.=Count(D4:D8)
   v. நிரல் வரைபு,சலாகை வரைபு

10. i.=C3*$F$12
    ii.=F6*$G$1
    iii.=Sum(B3:B8)
    iv.=max(C3:C8)
    v.=min(C3:C8)
    vi.=(C7+D7)-(E7+F7)

www.lkedu.lk

அலகு: 08 - இலத்திரனியல் நிகழ்த்துகை
பகுதி – I

1. Presentation என்பது……..
(அ).நிகழ்த்துகை (ஆ)அறிக்கை அளிக்கை (இ)முன்வைத்தல் (ஈ)சமர்ப்பித்தல் இதில் சரியானவை எது?
1) அ மற்றும் ஈ 2) அ மட்டும் 3) அ மற்றும் இ 4) இதில் அனைத்தும்

2. இலவசமாக கிடைக்க கூடிய இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருள்? …….
1) Ms.Powerpoint 2) Apple keynote 3) LibreOffice Impress 4) Corel Presentation

3. Open Office Impress ன் உற்பத்தி நிறுவனம் எது?.....
1)Document Foundation 2) Apache Corp. 3) Apple Inc. 4) இதில் எதுவுமில்லை

4. LibreOffice Impress ன் உற்பத்தி நிறுவனம் எது?.....
1)Document Foundation 2) Apache Corp. 3) Apple Inc. 4) இதில் எதுவுமில்லை

5. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் காணப்படுகின்ற சிறிதாக்கல், பெரிதாக்கல், மூடு பொத்தான்கள் காணப்படும் பட்டை எது?.....
1)தத்தல் பாட்டை 2) தலைப்புப்பட்டை 3) நாடாப்பட்டை 4) இதில் எதுவுமில்லை

6. இலத்திரனியல் நிகழ்த்துகை தயாரிக்கப்படும் இடம் ……
1) பணியிடப்பரப்பு 2) குறிப்பு சாளர அடுக்கு
3) கொள்பணி சாளர அடுக்கு 4) இதில் எதுவுமில்லை

7. நிகழ்த்துகையில் உட்புகுத்தக்கூடியவை (அ)படங்கள் (ஆ)ஒலிகள் (இ)ஒளியுருகள் (ஈ)உருக்கள் (உ) வடிவங்கள்
1) அ,ஈ,உ 2)அ,ஆ,உ 3) இதில் அனைத்தும் 4) இதில் எதுவுமில்லை

8. நிகழ்த்துகையில் எழுத்துப்பிழையை சரி பார்க்க எந்த சாவியை அழுத்துவீர்கள் ……
1) F9 2)F7 3)F5 4) F3

9. நிகழ்த்துகையின் அசைவூட்டத்திற்கு உட்புகுத்த கூடியவை……
1)பந்திகள் 2) அலங்காரங்கள் 3) படங்கள் 4) இதில் அனைத்தும்

10. இலத்திரனியல் நிகழ்த்துகையினை அச்சிட(Print) முடியுமா?.....
1)ஆம் 2)இல்லை 3)தனி மென்பொருள் தேவை 4) இதில் எதுவுமில்லை

www.ictedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

பகுதி – II

1 .தரமான இலத்திரனியல் நிகழ்த்துகை ஒன்றின் இயல்புகள் தருக?

2. இனையதளத்தில் Cloud Service உதவியுடன் கிடைக்கக்கூடிய இலத்திரனியல் நிகழ்த்துகைகள் யாவை?

3. இலத்திரனியல் நிகழ்த்துகைக்கு பயன்படுத்தக்கூடிய இலவச மென்பொருள் எவை?

4. Ms.Powerpoint நிகழ்த்துகையை ஆரம்பிக்கும் வழிமுறையை காட்டுக?

5. தனிப்பயன் அசைவூட்டங்கள்(Custom Animation) பற்றி விவரிக்க?

6. படவில்லை நிலைமாறல்(Slide Transition) பற்றி விவரிக்க?

7. இலத்திரனியல் நிகழ்த்துகை பாடவில்லையில் எவற்றையெல்லாம் உட்புகுத்தலாம்?

8. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருள் என்றால் என்ன?

9. நிகழ்த்துகை என்றால் என்ன?

www.lkedu.lk

அலகு: 08 - இலத்திரனியல் நிகழ்த்துகை
விடைகள்
பகுதி–I

வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை
1	4	**3**	2	**5**	2	**7**	3	**9**	4
2	3	**4**	1	**6**	1	**8**	2	**10**	1

பகுதி–II

1.

- எழுத்துக்களின் அளவு,
- எழுத்து வடிவமும் மொழிப் பிரயோகமும்
- நிறங்களை பயன்படுத்தல்
- அசைவூட்டம் மற்றும் ஒளியுருக்கள்
- நோக்கங்களைக் கருத்திற் கொள்ளல்
- படங்கள், சித்திரங்கள், அட்டவனைகள் மற்றும் வரிப்படங்களை உட்புகுத்தல்

2.

- Ms. Office 365 PowerPoint
- Google Presentation
- Microsoft sky Drive PowerPoint

3.

- LibreOffice Impress
- Open Office Impress

4

- Start →All Program →Microsoft Office →Ms.PowerPoint 2010/2013/2016/2020
- கணினியில் உள்ள Ms.PowerPoint shortcutயை இரண்டு முறை தொடர்ந்து சொடுக்குவதால் Ms.PowerPoint 2010/2013/2016/2020 ஆரம்பிக்கும்.

5. பட வில்லையினுள் உள்ள வசனங்கள், சித்திரங்கள், காட்சிகள் போன்றவற்றை பலவிதமான அசைவூட்டங்களை செய்து காட்சிப்படுத்த முடியும். தேவைக்கேற்ப அசைவூட்டங்களைச் சேர்க்கவும், நீக்கவும் முடியும்.

6. ஒரு பாடவில்லையிலிருந்து இன்னொரு பாடவில்லைக்கு மாறுவதற்கு பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. இதற்குப் பொருத்தமான மாற்று வழிகளை இதன்மூலம் பெற்றுக்கொள்ள முடியும். வேகம், ஒலி, படவில்லைகளின் தன்னிச்சையான பரிமாற்றம் போன்றவற்றை இதன்மூலம் மேற்கொள்ளலாம்.

7. உருக்கள்/வடிவங்கள், படங்கள், அசைவூட்டங்கள், ஒலி, ஒளியுருக்கள் உட்புகுத்தலாம்

8. ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது நிகழ்வு தொடர்பாக தொகுக்கப்பட்ட விடயங்களை ஒழுங்கு முறையாக ஏனையவருக்கு எடுத்துரைக்க உதவும் பல்லூடக தன்மைகளை உள்ளடக்கிய கணினி மென்பொருள் ஆகும்.

9. ஒரு நபர் அல்லது பலர் தமது எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் அறிவினை ஒரு பெரும் கூட்டத்தாருடன் பரிமாறிக் கொள்வதற்கான மேற்கொள்ளப்படும் முயற்சி நிகழ்த்துகை எனப்படும்.

www.ikedu.lk

அலகு: 09 – தரவுத்தளம்
பகுதி–I

1. இலத்திரனியல் தரவுத்தளத்தின் அனுகூலமாக அல்லாதது?
   1) வினைத்திறன் அதிகம் 2) திருத்தம் அதிகம்
   3) தரவுகளை இற்றைபடுத்தப்படுத்தல் 4) அதிக மனிதவளம் தேவைப்படும்

2. ஒரு தொடர்பு தரவுத்தள அட்டவணையில் முதல்சாவி தொடர்பாக பின்வருவனவற்றில் எது சரியானது?
   1) அது கட்டாயம் எண் (number) தரவாக இருக்க வேண்டும்.
   2) அது வெற்றாக இருக்கலாம்
   3) அது ஒரு தனித்துவமானதாக (unique)இருக்க வேண்டும்
   4) அது ஒரே போன்று பல தரவுகளை கொண்டு இருக்கலாம்

3. பின்வருவவற்றில் சரியான ஒழுங்குமுறை எது?
   1) பதிவு -புலம்- அட்டவணை -தரவுத்தளம்
   2) பதிவு -அட்டவணை-புலம்-தரவுத்தளம்
   3) புலம்-பதிவு -அட்டவணை-தரவுத்தளம்
   4) புலம்-அட்டவணை -பதிவு –தரவுத்தளம்

4. புத்தகம் விற்பனை ஆகும் கடை ஒன்றில் புத்தகங்களில் நாவல்கள் சிறுகதைகள் ,கட்டுரைகள் ,ஓவியங்கள் ,என பலவகைப்படும் இதில் அட்டவணையில் உள்ள ஒரு புத்தகம் பற்றிய தரவானது ?
   1) புலம் (field) 2) அன்னியசாவி(foreign key) 3) பதிவு (records) 4) அட்டவணை(table)

5. மாணவர் விபரம் அட்டவணை ஒன்றில் மாணவரது பிறந்த திகதி என்ற புலம் உருவாக்கப்பட வேண்டும் .இதற்கு பயன்படும் தரவுவகை ?
   1) Text 2) Memo 3) Date 4) number

6. தரவுத்தளம் ஒன்றில் தொடர்பான அட்டவணையில் நூலாசிரியரின் பெயர் விபரத்திற்கு ஒரு புலம் உருவாக்கப்பட்டது. இதற்கு பயன்படும் தரவுவகை?
   1) Text 2) Memo 3) Date 4) number

7. பின்வரும் மென்பொருள்களில் தரவுத்தள முகாமைத்துவ தொகுதி மென்பொருள் (DBMS)ஆக அமையாதது எது?
   1) MS access 2) Oracle 3) Ms Word 4) Libre Office Base

8. தொடர்புநிலைதளம் உருவாக்குதல் செயல்பாட்டில் பயன்படும் தொடர்புடைமை அல்லாதது ?
   1) ஒன்றுக்கு ஒன்று (one-to-one)
   2) ஒன்றுக்கு பல (one-to-many)
   3) பலவிற்கு பல(many-to-many)
   4) பலவிட்கு சில (many-to-some)

9. தொடர்புநிலைத்தரவு தளத்தில் (relational) தொடர்பு (relationship) பற்றி சரியானது?
   1) தொடர்புடைமை என்பது இரண்டு நிரல்கள் தொடர்பான இணைப்பு
   2) தொடர்புநிலை என்பது இரண்டு நிரைகளுக்கு இடையிலான இணைப்பு
   3) தொடர்புநிலை என்பது இரண்டு அட்டவணை இடையிலான இணைப்பு
   4) தொடர்புநிலை என்பது இரண்டு தரவுத்தளம் இடையிலான இணைப்பு

www.ikedu.lk

10. பின்வருவனவற்றில் அன்னியசாவி பற்றி பிழையானது எது?
    1) இரண்டு அட்டவணை இடையே தொடர்புடைமை உருவாக்கல்
    2) தொடர்பு பட்ட அட்டவணைகளிலே முதல்சாவியைகக் கொண்ட புலத்துடன் தொடர்புடைய தரவுகள் மாத்திரமே காணப்படும்
    3) ஒரு அட்டவணையில் அன்னியசாவியானது இன்னோர் அட்டவணையின் முதல்நிலை சாவியாக காணப்படும்
    4) அன்னியசாவி புலம் எப்போதும் தனித்துவமானது.

11. பின்வருவானவற்றில் தரவுவகையாக அமையாதது எது?
    1) Text 2) True 3) Currency 4) memo

12. பின்வரும் (key) சாவிகளில் வெற்றாக இருக்க முடியாதது எது?
    1) முதல்நிலைசாவி 2) அன்னியசாவி
    3) முதல்நிலைசாவி,அன்னியசாவி 4) மேற்கூறிய எதுவும் இல்லை

13. பின்வருவனவற்றில் முதல்நிலை சாவியாக கருத்தமுடியாதது எது?
    1) மாணவர் _ID 2) Admission_num 3) NIC_NUM 4) Address

Student தரவுத்தளதில் சில பதிவுகளை கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது 14-16 வினாக்களுக்கு கீழ் உள்ள அட்டவணையை பயன்படுத்தி விடை காண்க

Student_num	Name	Date of birth
001_A	K.Rama	2000.8.22
002_B	S.Kajananan	2000.5.14
003_C	P.Ruku	2000.8.26

14. தரப்பட்டுள்ள அட்டவணையில் எத்தனை பதிவு(records)உள்ளன?
    1) 2 2) 3 3) 1 4) 4

15. தரப்பட்டுள்ள அட்டவணையில் எத்தனை புலன்கள் உள்ளன?
    1) 2 2) 3 3) 4 4) 5

16. Student_Num புலத்தை உருவாக்க பயன்படும் தரவுவகை எது?
    1) Text 2) Memo 3) Date 4) Number

கணனி தொடர்பான தரவுத்தளதில் .சில பதிவுகளை கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது 17-19 வினாக்களுக்கு கீழ் உள்ள அட்டவணையை பயன்படுத்தி விடை காண்க

Part_num	PartName	Quantity	Unit_Price
P001	Hard Disk	2	4000
P002	Mouse	2	200
P003	UPS	1	20000

17. அட்டவணையில் உள்ள ஒரு ஒரு கணினி தொடர்பான தகவல் ?
    1) புலம் (field) 2) சாவி (key) 3) வினவல் (query) 4) பதிவு (records)

18. இவ் அட்டவணையில் உள்ள புலம்கள் எத்தனை ?
    1) 1 2) 2 3) 4 4) 3

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

19. முதன்மை சாவியாக பயன்படுத்தக்கூடிய புலம் எது ?

1) Part_num 2) PartName 3) Quantity 4) Unit_price

20. தொடர்பு தரவு தளம் பற்றிய பின்னரும் கூற்றுகளை கருத்துக

A. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரவுத்தளங்களுக்கு இடையே உள்ள சேர்மானம் ஆகும்

B. தொடர்புடைமை தரவுத்தளத்தில் உள்ள தொடர்புடைமைகளின் வகையில் ஒன்றுக்கொன்றான ஒன்றுக்கு பலவான ,பலவுக்கு பலவான என்னும் தொடர்புடைமைகள் அடங்கும்.

C. ஒரு தொடர்புத் தளத்தில் பல மடங்கு அட்டவணைகளை கொண்டு இருக்கலாம் .

மேற்கூறியவற்றில் சரியானது ?

1) A மாத்திரம் 2) A,B மாத்திரம் 3) B,C மாத்திரம் 4) C மாத்திரம்

பகுதி–II

1. பின்வரும் தரவுகளுக்கு பொருத்தமான தரவுவகைகளை இனம்காண்க.

Data	Data_Type
I. Nic_Number	
II. Address	
III. மாணவர்பதிவுஇலக்கம் (93112,93102..)	
IV. பாடக்குறி (001a,002a)	
V. திணைக்கள பெயர்	
VI. மாணவர் வரவு திகதி	
VII. Quantity	
VIII. Itemcode (A01,B02,C03)	
IX. Age	
X. Serial Number (1,2,3)	
XI. Married or not	
XII. Unit_price	
XIII. Students result (pass or fail)	
XIV. Salary	
XV. Street	

2. பின்வரும் வினாக்களுக்கு விடை காண்க

I. இலத்திரணியல் தரவு தளத்தின் நன்மைகள் 4 தருக?

II. இலத்திரணியல் தரவு தளத்திற்கும் கைமுறை தரவுத்தளத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் 5 தருக.

III. முதன்மை சாவிக்கும் அன்னியசாவிக்கும் இடையிலான வேறுபாடுகளை ஒப்பிடுக.

IV. இணைந்தசாவி என்றால் என்ன? உதாரணம் ஒரு வீதம் விளக்குக?

www.ikedu.lk

3. மாணவர்பதிவு தரவுத்தளத்தில் மாணவர் அட்டவணையும் ,அவர் தங்கி உள்ள இல்லம் அட்டவணையும் தரப்பட்டுள்ளது. ஒரு மாணவர் ஒரு இல்லத்திற்குரியவர் அதே வேளை ஒரு இல்லம் ஒன்றிக்கு மேற்பட்ட மாணவர்களை கொண்டுள்ளது.

Student table

Admission_Num	StudentName	Hostel_Id
S01	S.Aravinthan	H01
S02	K.Shamapavi	H02
S03	M.Kajanan	H02
S04	P.Puvan	H04

Hostel table

HostelId	HostelName
H01	Paarathy
H02	Valluvan
H03	Raaman
H04	kaanthy

1) முதன்மைசாவிக்களாக பயன்படும் புலன்களும் அதன் அட்டவணைகளையையும் முறையே காண்க.

2) அன்னியசாவியாக செய்லபடும் புலத்தை காண்க.

3) Student அட்டவணையை பயன்படுத்தி அல்லது வேறு யாதாயினும் வழிமுறைகளில் அட்டவணைகளுக்கு இடையே உள்ள தொடர்புடைமையை காண்க.

4. மாணவர் தரவுத்தளமொன்றின் விபரங்கள் வருமாறு.

Student Table

Admision_Num	Student_name	Date_birth
1245	Kajan.p	22.08.1995
1452	Yuvan.s	26.07.1995

Subject table

Subject_Num	Subject
101	Maths
102	English
103	ICT
104	Science
105	Tamil

Marks Table

Admision_Num	Subject_Num	Term	Marks
1245	101	1	45
1245	102	2	36
1452	101	1	89
1452	103	3	90

I. முதன்மைசாவிக்களாக பயன்படும் புலன்களும் அதன் அட்டவணைகளையையும் முறையே காண்க.

II. இங்கு இணைந்த சாவியாக பயன்படும் புலன்கள், அட்டவணைதருக.?

III. Yuvan.S என்ற மாணவன் 106 இலக்கம் உடைய history பாடத்தில் இரண்டாம் தவணையில் 78 புள்ளிகளை பெறுவான் ஆயின் தரவுத்தளத்தில் ஈட்டை படுத்த வேண்டிய அட்டவணையையும் அதன் தரவுகளையும் இற்றை படுத்தி காட்டுக.

www.ikedu.lk

அலகு: 09 – தரவுத்தளம்
விடைகள்
பகுதி–I

வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை
1	4	**5**	3	**9**	3	**13**	4	**17**	4
2	3	**6**	1	**10**	4	**14**	2	**18**	3
3	3	**7**	3	**11**	2	**15**	2	**19**	1
4	3	**8**	4	**12**	1	**16**	1	**20**	3

பகுதி–II

1.

I. Text
II. number
III. Text
IV. Text
V. Text
VI. Date
VII. Number
VIII. Text
IX. Number
X. AutoNumber
XI. Boolean
XII. Number
XIII. Boolean
XIV. Currency
XV. Text

2. **I)** வினைத்திறன் அதிகம்
நம்பகத்தன்மை அதிகம்
தரவுகளை இற்றை படுத்துவது இலகுவாகும்
குறைந்த மனித வளம் போதும்.
தரவுகளை சேமிக்க குறைந்த இடம் போகும்

II)

இலத்திரணியல் தரவு தளம்	கைமுறை தரவுத்தளம்
வினைத்திறன் அதிகம்	வினைத்திறன் குறைவு
நம்பகத்தன்மை அதிகம்	நம்பகத்தன்மை குறைவு
தரவுகளை இற்றை படுத்துவது இலகுவாகும்	தரவுகளை இற்றை படுத்துவது கடினமானதாகும்
குறைந்த மனித வளம் போதும்	அதிக மனித வளம் போதும்.
தரவுகளை சேமிக்க குறைந்த இடம் போகும்	தரவுகளை சேமிக்க அதிக இடம் போகும்

www.lkedu.lk

III)

முதன்மை சாவி	அன்னியசாவி
அது ஒரு தனித்துவமானதாக (unique)இருக்க வேண்டும்	அது ஒரு தனித்துவமானதாக (unique)இருக்க வேண்டியதில்லை
அது வெற்றாக இருக்க முடியாது	அது வெற்றாக இருக்கலாம்
ஒரு அட்டவணையில் ஒரு primary key மட்டுமே காணப்படும	ஒரு அட்டவணையில் பல foreign key காணப்படலாம்

IV)

சேர்மாணகிசாவி என்பது இரண்டு அல்லது இரண்டிக்கு மேட்பட்ட பண்புகள் (attributes)சேர்ந்து தனித்துவமாக அடையாளம் காண உதவும் சாவி ஆகும் .

Eg:-

Itemid	Item	unitprice	Quantity
001	Lux	40	2
001	Raani	50	3
002	Komba	40	1
002	dove	40	2

- Itemid ,item இரண்டும் சேர்மான சாவி ஆகும்.

3. a**)**Student table :- Admission_Num
   Hostel table:- Hostel table
   b**.)**Student table :- Hostel_Id
   c.)one student –one hostel
   (one to one)

4. a)Student Table:- Subject table
   Admision_Num:- Subject_Num
   b) Marks Table:- Admision_Num
   Subject_Num

c) Student Table

Subject_Num	**Subject**
106	history

Marks Table

Admision_Num	**Subject_Num**	**Term**	**Marks**
1452	106	1	78

www.ikedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

இலத்திரனியல் விரிவுத்தாள்

இலத்திரனியல் விரிவுத்தாளின் பணிகள்

- கணிதம் மற்றும் கணக்கீட்டுடன் தொடர்புடையகணித்தல் செயற்பாட்டை இலகுவாகமேற்கொள்ளல்
- வரைவுகள் மூலம் தரவுகளைவிளக்குதல்
- தேவையான தரவுகளை மாத்திதிரம் பிரித்தெடுத்தல்
- பணித்தாள்களை ஒழுங்குபடுத்தல்
- தரவுகளின் நம்பகத்தன்மையை பரிசீலித்தல்
- கடவுச் சொல்லைப் பயன்படுத்தி தரவுகளை பாதுகாக்க முடிதல்

இலத்திரனியல் விரிவுத்தாள் மென்பொருளினை உற்பத்திசெய்யும் நிறுவனங்களும் அவற்றினால் உற்பத்தி செய்யப்படும் மென்பொருட்களின் பெயர்களும்

மென்பொருள்	உற்பத்திசெய்யும் நிறுவனங்கள்
• Excel	Microsoft Cooperation
• Numbers	Apple Inc.
• Open Office Calc	Apache Foundation
• Libre Office Calc	The Document Foundation

பணித்தாள்(Work Sheet)

பணித்தாளானது இரு பரிமாணம் கொண்டநிரல்கள் (Columns),நிரைகள் (Rows)களினால் உருவாக்கப்பட்டுள்ளது.

பணித்தாளின் நிரலானது A,B,C,D,AA,AB,AAAஎனவும்

பணித்தாளின்நிரையானது 1,2,3.4…….. எனவும் பெயரிடப்பட்டிருக்கும்.


கலம்(Cell)

பணித்தாளின் நிரல் மற்றம் நிரையின் குறுக்குவெட்டானதுகலம்(cell) எனஅழைக்கப்படும். அக் கலமானதுநிரலின் பெயர் மற்றும் நிரையின் பெயரைக் கொண்டுஅழைக்கப்படும். இதனைகலமுகவரி (Cell Address) எனஅழைக்கப்படும்.

Eg:-A1, B12, Z56, AA15, AC13

கலவீச்சு(Cell Range)

பலகலங்களை இணைத்துக் காட்டுவதுகலவீச்சுஎனஅழைக்கப்படும். பின்வரும் படத்தின் மூலம் இதனைவிளங்கிக் கொள்ளலாம்.



Ms Excel 2010, Libre office Calsகளில் காணப்படும் நிரல் நிரைகளின் எண்ணிக்கை வருமாறு

	Ms Excel 2010	Libre office Cals
நிரல்	XFD(2^{14}=16384)	AMJ(2^{10}=2033)
நிரை	1048576 (2^{20})	1048576(2^{20})

www.ictedu.lk

சூத்திரங்களைஉள்ளீடசெய்தல்(Fomula)

கணிப்பீட்டுகளை செய்வதற்காக சமன் (=) அடையாளத்தை முதலில் இட்டு பெறுமானங்கள்,கலமுகவரிகள்,தசமதானம் என்பவற்றை பயன்படுத்தி எழுதப்படும் குறியீடு சூத்திரம் ஆகும். சூத்திரமானது எப்போதும் = அடையாளத்துடனேயே ஆரம்பிக்கப்படும்.

சூத்திரங்களைஎழுதப் பயன்படத்தப்படும் கணித்தல் குறியீடுகள்

குறியீடுகள்	கணிதச் செயற்பாடுகள்	பெறுபேறுகள்	
%	சதவீதம்	5%	0.05
+	கூட்டல்	=2+3	5
-	கழித்தல்	=3-2	1
*	பெருக்கல்	=3*2	6
/	வகுத்தல்	=3/2	1.5
^	வலு	=2^3	8
( )	Brackets		


- **மேலேகுறிப்பிட்டஅட்டவணையில் உள்ளகுறியீடுகள் கீழ் இருந்துமேல் நோக்கியஒழுங்கில் முன்னுரிமையளித்துசெயற்படும்.**

சூத்திரத்தைபிரதிசெய்யும் முறைகள்

ஒருகலத்தில்தட்டச்சுசெய்யப்பட்டசூத்திரத்தை,சார்பினைதொடராகபலகலங்களுக்குபிரதிசெய்துகொள்ளவேண்டியிருக்குமாயின் பின்வரும் இருவழிகளில் பிரதிசெய்யலாம்.

- கலத்தின் நிரப்புபிடியினைப்(Fill Handling) பயன்படுத்துதல்
- பிரதி (Copy),ஒட்டுதல் (Paste)என்பவற்றைப் பயன்படுத்துதல்

1. **கலத்தின் நிரப்புபிடியினைப்(Fill Handling) பயன்படுத்துதல**



- சூத்திரத்திலுள்ள கலத்தினை தெரிவுசெய்தல்
- பின் கலத்தின் வலப்பக்ககீழ் மூலையிலுள்ள நிரப்புபிடியினை தெரிவுசெய்து தேவையான கலம் வரை இழுத்துவிடவும்.

2. **பிரதி (Copy),ஒட்டுதல் (Paste)என்பவற்றைப் பயன்படுத்துதல்**

- சூத்திரம் உள்ளகலத்தினைதெரிவுசெய்தல்
- பின் அதனை(Copy)/(ctrl+C)குறியீட்டினைக் கொண்டு பிரதிசெய்தல்
- பின் சூத்திரம் தேவையானகலம்/கலவீச்சைதெரிவுசெய்தல்
- தெரிவு செய்யப்பட்டகலம்/கலவீச்சில் ஒட்டுதல்(Paste) / (Ctrl +V)

www.ictcol.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

Prepared by

Zonal

Information & Communication Technology

Education Centre

(Computer Resource Centre)

Vadamaradchy

PULOLY



www.ikedu.lk

www.katral.lk

www.youtube.com/c/crcvadamaradchy